**இலங்கைப் பாராளுமன்றம்**

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர்**
**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தை**
**மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட**
**இலங்கைப் பாராளுமன்றத்தின்**
**அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உப குழு**

## பொது மக்களின் கருத்துகளையும், முன்மொழிவுகளையும் கோரல்

2026ஆம் ஆண்டு மே மாதம் 06ஆந் திகதி, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தை மறுசீரமைப்பது தொடர்பான ஆய்வறிக்கையைத் தயாரிப்பதற்காக உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் தவிசாளராக பாராளுமன்ற உறுப்பினர் **கௌரவ ருவன் மாபலகம அவர்கள் பணியாற்றுவதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ (சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ மற்றும் கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற)** பிரகீத் மதுரங்க ஆகியோர் அங்கத்தவர்களாக பணியாற்றுகின்றனர். எனவே, இவ்விடயம் தொடர்பாக கரிசனை கொண்ட அனைத்து தரப்பினரதும் கருத்துகளைப் பெற்றுக் கொள்வதற்கு உப குழு எதிர்பார்ப்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாக பிரதானமாகக் கவனம் செலுத்தப்படும்.

1. **இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் வசமுள்ள வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெறல்**
2. **அதிகளவான மாணவர்களை பாடநெறிகளுக்கு இணைத்துக் கொள்ளல்**
3. **மாணவர்களைத் தொடர்ச்சியாகப் பாடநெறியில் தக்கவைத்துக் கொள்வதில் காணப்படும் சிக்கல்கள், மாணவர் நலனோம்புகை நடைமுறைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பாடநெறிகளை நிறைவு செய்ததன் பின்னர் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமையை மேம்படுத்தல்**
4. **தொழிற் சந்தையில் நிலவும் உண்மையான ஊழியர் தேவையை இனங்காணல்**
5. **பின்தங்கியப் பிரதேசங்களில் அமைந்துள்ள கல்வி நிறுவனங்கள் எதிர் கொள்ளும் சவால்களைக் கருத்திற் கொள்ளல்**

**மேற்படி விடயங்கள் தொடர்பான கருத்துகளை / முன்மொழிவுகளை தெரிவிப்பதற்கு எவரேனும் ஒருவர்** அல்லது ஏதேனுமொரு அமைப்பு விரும்புமிடத்து, உரிய முறையில் கையொப்பமிடப்பட்ட எழுத்துமூலச் சமர்ப்பணங்களை **2026ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ** "**செயலாளர், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அலுவலகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தன புர, கோட்டே** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். இல்லையெனில், அவற்றை **011-2777559 / 011-2777601** என்ற தொலைநகல் (fax) இலக்கத்திற்கு அல்லது cope@parliament.lk என்ற மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மேற்படி எழுத்துமூலச் சமர்ப்பணங்களுக்கு மேலதிகமாக வாய்மொழி மூலச் சாட்சியங்களையும் வழங்குமாறு குழுவால் விதிக்கப்படலாம். இவ்வறிவித்தல் பாராளுமன்ற இணையதளத்திலும் (www.parliament.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.
குழுவின் செயலாளர்

**இலங்கைப் பாராளுமன்றம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே

2026ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி

விசாரணைகள் : **011 2777301**